**செ.வெ.எண். 126** **நாள்: 06.09.2016**

பெருநகர சென்னை மாநகராட்சி

**பெருநகர சென்னை மாநகராட்சியில் பணிபுரிந்த ஓய்வூதியதாரர்களுக்கு ஓய்வூதியப் பயன்களையும், பணியின்போது உயிரிழந்த பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையில் பணி நியமன ஆணையினையும் மாண்புமிகு பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திரு.சைதை துரைசாமி அவர்கள் வழங்கினார் !**

-----

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க, மாண்புமிகு பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திரு. சைதை துரைசாமி அவர்கள் மற்றும் ஆணையாளர் முனைவர். தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்களின் தலைமையில் பெருநகர சென்னை மாநகராட்சி சிறப்பாக செயல்பட்டு வருகிறது.

மாண்புமிகு பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திரு.சைதை துரைசாமி அவர்கள் அம்மா மாளிகையில் பொதுத்துறை சார்பில் இன்று (06.09.2016) பெருநகர சென்னை மாநகராட்சியில் பணிபுரிந்து ஓய்வுபெற்ற ஓய்வூதியதாரர்களுக்கு ஓய்வூதியப் பயன்களையும், பணியின்போது உயிரிழந்த பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையில் பணி நியமன ஆணையினையும் வழங்கினார்.

ஜுன் 2016ம் மாதத்தில் மட்டும் பெருநகர சென்னை மாநகராட்சியில் அனைத்து வகுப்புகளிலிருந்து 240 அலுவலர்கள்/பணியாளர்கள் வயது முதிர்வு காரணமாக ஓய்வு பெற்றுள்ளனர். இவர்களுக்கு ஓய்வூதியப் பயன்கள் ரூ.13.88 கோடி வழங்கப்பட்டது. இதனால் மாதந்தோறும் ரூ.28.80 இலட்சம் கூடுதல் செலவினம் ஏற்படும்.

பெருநகர சென்னை மாநகராட்சியில் ஓய்வூதியதாரர்கள் 9003 நபர்களும், குடும்ப ஓய்வூதியதாரர்கள் 8549 நபர்களும் உள்ளனர். இவர்களில் ஓய்வூதியதாரர்களுக்கு ரூ.10.98 கோடியும், குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கு ரூ.6.22 கோடியும் வழங்கப்பட்டு வருகிறது. ஆகமொத்தம் மாதந்தோறும் ரூ.17.20 கோடி வழங்கப்பட்டு வருகிறது.

மேலும், பெருநகர சென்னை மாநகராட்சியில் பணிபுரிந்து பணியின் போது உயிரிழந்த குடும்பத்தினரின் வாரிசுதாரர்கள் 57 நபர்களுக்கு கருணை அடிப்படையிலான பணி நியமன ஆணையினை மாண்புமிகு மேயர் அவர்கள் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் முனைவர். தா. கார்த்திகேயன், இ.ஆ.ப. அவர்கள், துணை ஆணையர் (பணிகள்) திரு.கே.எஸ்.கந்தசாமி, இ.ஆ.ப. அவர்கள், துணை ஆணையர் (சுகாதாரம்) திரு. ஆர். கண்ணன், இ.ஆ.ப. அவர்கள், உதவி ஆணையர் (பொ.நி.(ம).ப.) திருமதி.கஸ்தூரி அவர்கள் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: துணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி.**